[1978 மார்ச் 2

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்.

*658வினா.—திரு.எஸ். கணேசன்: மாண்புமிகு உணவு—கூட்டுற வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்டவினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கடந்த ஐந்து வருடங்களாக எந்தவித வரவு-செலவும் வைத்துக் கொள்ளாத மீனவர் கூட்டுறவு சங்கங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: (அ) இருபத்தைந்

(ஆ) நீர் நிலைகளில் தண்ணீர் இல்லாமல் இருந்த காரணத் தினாலும், போதிய நிதி வசதிகள் இல்லாமையினாலும், பெரும் பான்மை சங்கங்களின் உறுப்பினர்கள் பிழைப்பை நாடி வெளியூர் களுக்குச் சென்றுவிட்டனர்.

சென்னையிலுள்ள பள்ளிகளின் நேரம்.

* 659 வினா—. திரு. மு. அரங்கநாதன்:
திரு. சோ. அழகர்சாமி:
திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
திரு. து. புருஷோத்தமன்:
திரு. துரை முத்துசாமி:

மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —:

சென்னை மாநகரத்தில் உள்ள பள்ளிகளின் துவக்க நேரத்தை மாற்றி அமைக்கும் திட்டம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்பொருள் அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, இப்போது பள்ளி துவக்க நேரங்கள் மிக அதிகாலையிலே இருப்ப தாகவும், அப்பொழுது குழந்தைகள் போவதற்குச் சிரமப்படுவ தாகவும் சொல்லப்படுகிறது, அது உண்மையா? இப்பொழுது காலையிலும், மாலையிலும் இரு ஷிப்டுகள் நடத்தப்படுகின்றதா? காலையிலே எத்தனை மணிக்கு பள்ளிகள் ஆரம்பிக்கப்படுகின்றன? அதேபோல், மாலையிலே எத்தனை மணிக்கு ஆரம்பிக்கப்படு கின்றன? இதுபற்றி, பெற்றோர்கள் சார்பிலே, பள்ளிகள்சார்பிலே மாறுதல் செய்ய வேண்டுமென்று விண்ணப்பம் வந்திருக் கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தென் சென்னை பள்ளிகள் காலை 8—30 மணி, வட சென்னை பள்ளிகள் காலை 9 00 மணி, சென்னை கல்லூரிகள் காலை 9—00 மணி என்று மாற்றியமைக்கப்பட்டது. இவ்வாறு பள்ளிகள்